**பலபிட்டிய பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பலபிட்டிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பலபிட்டிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வழங்கிய கழிவுகள் ரூபா 916,175 தொகை வருமானச் செலவுக் கணக்கிற்கு மாற்ற வேண்டிய போதிலும் ரூபா 850,468 தொகை மாத்திரம் செலவுகள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | சரி செய்யவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | ஆண்டின் போது வழங்கியிருந்த ஊழியர் கடன் ரூபா 503,657 தொகை கடனை மூலதனக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2022 ஆண்டின் போது மூலதனப்படுத்தப்பட்டிருக்காத ரூபா 157,386 இற்கான நிலையான சொத்துக்கள் 2023 ஆண்டின் போது மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகை கணக்கிற்கு செலவு வைக்காமல் மூலதனச் சொத்துக்கள் திருத்த வேலை மற்றும் பராமரிப்பு செலவுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | நிலையான சொத்துக்கள் தனதாக்கல் ரூபா 499,645 தொகை நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | ஆயுர்வேத இருப்பு நுகர்வு ஆரம்ப இருப்பு ரூபா 1,060,983 தொகை வழங்கள்கள் மற்றும் உபகரணக் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டியிருந்த போதிலும், அவற்றில் ரூபா 300,000 தொகை மாத்திரம் அந்தக் கணக்கிற்கு மாற்றப்பட்டு, மீதியாகிய ரூபா 760,983 இற்கான இருப்பினை உதவிகள் மற்றும் பங்களிப்புத் தொகை மற்றும் மானியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | முன்னைய ஆண்டிற்கான ரூபா 13,487,919 இற்கான முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 216,600 தொகை மிகைகள் மற்றும் பற்றாக்குறை கணக்கிற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் ஆண்டிற்கான வருமானத்திற்கு செலவு வைக்ககப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | 03 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 3,062,700 தொகைக்காக மற்றும் செலுத்த வேண்டிய செலவுகள் தொடர்பாக ரூபா 486,835 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | பொல்அதுபலான 1 ஆம் குறுக்குத் தெரு செப்பனிடுவதற்குரிய தடுத்தல் வைத்தல் பணம் ரூபா 149,913 தொகை எனினும் ரூபா 14,999 தொகை என மூலதனச் செலவு கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மீளாய்வாண்டின் போது 03 நிர்மாண வேலைகள் தொடர்பாக கிடைக்கப் பெற்று கடன்கொடுத்தோருக்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்ட ரூபா 689,417 தொகை மீண்டுமொருமுறை மிகை ஒதுக்கமென கடன்பட்டோர் கணக்கில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. | 2024 இறுதிக் கணக்குகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் பெறுமதி ஆகிய ரூபா 367,765,043 இற்கான மீதி மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகை கணக்கு மற்றும் உதவிகள் மூலம் பங்களிப்பு கணக்குகள் இரண்டும் சமமாக காணப்பட வேண்டிய போதிலும், அந்த கணக்கு இரண்டினதும் மீதிகள் ரூபா 210,055,058 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 157,709,985 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | குாணிகள் மற்றும் கட்டிடங்களின் சந்தைப் பெறுமதிக்கு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட காரணத்தினால் ஏற்பட்டிருந்த மீள் மதிப்பீட்டு ஒதுக்கப் பெறுமதியாகும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 15 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 28,655,403 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 183,805,688 தொகைக்கான 06 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியவில்லை. | பெறுமதியை மீள்மதிப்பீடு செய்து இந்த அட்டவணை சரி செய்யப்படும் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பொது நிருவாக, உள்நாட்டு விவகார மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரின் 2022 திசெம்பர் 15 திகதிய உள்ளூராட்சி சுற்றறிக்கை 2022/01 | உள்ளூராட்சி நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக தகவல் தொழிநுட்ப ரீதியான தீர்வு வழங்குவதற்காக இணையதளம் ஒன்று நிர்மாணித்திருக்கவில்லை. | தேவையான அலுவல்களுக்காக இலங்கை டெலிகொம் நிறுவனத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 30/2016 | சபைக்கு சொந்தமான 05 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. | எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | -மேற்படி- |

### 1.7.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயலாளரினால் ஒரு நாளைக்கு வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் இடையே 04 தடவைகள் பிரயாணம் செய்வதற்காக தொகுதிப் போக்குவரத்து வசதிகளின்றி சபையின் வாகனத்தை பயன்படுத்தியிருந்துடன், எரிபொருளுக்காக ரூபா 107,695 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி நிறுவனங்களின் அங்கத்தவர்களின் பதவிக் காலம் முடிவடைந்தவுடன் அந்த கடமைத் துறைகள் விரிவடைந்திருந்தது என. | கிரயம் குறையுமாறு செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 12,106,511 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 14,183,781 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 22,815,000 | 22,037,758 | 19,183,711 | 34,205,492 | 13,360,000 | 18,093,709 | 13,462,321 | 31,351,245 |
| வாடகை | 5,130,000 | 6,114,336 | 4,368,920 | 4,250,733 | 3,320,000 | 5,194,295 | 4,248,992 | 2,505,317 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,810,000 | 4,063,042 | 4,077,992 | - | 6,015,000 | 2,956,712 | 2,947,962 | 14,950 |
| ஏனைய வருமானங்கள் | 24,550,000 | 21,794,575 | 21,794,575 | - | 7,947,000 | 7,980,366 | 7,980,366 | - |
| | 55,305,000 | 54,009,911 | 49,425,198 | 38,456,225 | 30,642,000 | 34,225,082 | 28,639,641 | 33,871,512 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வருமானம் ரூபா 33,871,512 தொகையாக இருந்தது. ஆண்டின் போது சிட்டையிடல் ரூபா 54,009,911 தொகையுடன் சேகரிக்க வேண்டிய ஒட்டுமொத்த வருமானம் ரூபா 87,881,423 தொகை எனினும் ஆண்டின் போது சேரிக்கப்பட்டிருந்தது ரூபா 49,425,198 தொகை மாத்திரமே. | சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கொஸ்கொட உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் வீதவரி அறவீடு செய்யப்படாத 23 முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் 2012 ஆண்டில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டிருந்த போதிலும், பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரவு 134 இற்கு இணங்க வீதவரி விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 134 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | முன்னேற்றப்பட்ட கிராமப் பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பலபிட்டிய பல்கரும கட்டிடத்தின் கடையறையொன்று வ/ப பலபிட்டிய பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் மூலம் 2021 ஆண்டு முதல் வாடகை செலுத்தாமையால் 2023 இறுதியில் உள்ளவாறு நிலுவை கடையறை வாடகை மீதி ரூபா 1,467,000 தொகை மற்றும் நிலுவை மிகைக் கட்டணம் தொகை ரூபா 195,300 தொகையாக கூட்டுத்தொகை ரூபா 1,662,300 தொகை நிலுவையாக காணப்பட்டது. | நிலுவைக் கடை வாடகை செலுத்தாமை தொடர்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது என. | தொடர்ச்சியாக காலரீதியாக வாடகைத் தொகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | அஹுங்கல்ல பொதுச் சந்தையின் 03 மீன்கடை குடில்கள் காணப்படுவதுடன் அதனை டெண்டர் மூலம் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்திலிருந்து வாடகையாளர்களினால் வாடகை தொகையை செலுத்தாமையால் ரூபா 277,500 இற்கான நிலுவை ஒரே தடவையில் செலுத்தும் பண மீதியொன்றும், ரூபா 136,350 இற்கான நிலுவைக் கடை வாடகை மீதியொன்றும், ரூபா 3,800 இற்கான நிலுவை தண்ட வாடகை மீதியொன்றுமாக ரூபா 417,650 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கைப்படும் என. | காலரீதியாக வாடகைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2022 ஆண்டின் போது ரூபா 195,480 இற்கான கட்டணம் செலுத்தப்பட்டிருந்த 14 அறிவித்தல் பலகைகள் 2023 ஆண்டிலும் காட்சிப்படுத்தப்பட்டு இருந்த போதிலும், அவற்றிலிருந்து கட்டணம் அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் விளம்பர அறிவித்தல் பலகைகளில் இருந்து கட்டணம் அறவீடு செய்வதற்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என. | அறவிடப்பட வேண்டிய அறிவித்தல் பலகைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 28,196,819 தொகை காணப்பட்டது. | எதிர்காலத்தில் அறவிடப்படும் என. | முத்திரைக் கட்டண நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டுள்ள கருமங்களை நிறைவேற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரமாகும் குப்பைகளை மொன்டோவியாவத்த குப்பை செயற்திட்டத்திற்கு | அதற்கு பொருத்தமான இடமொன்று இனங்கண்ட பின்னர் சேதனப் பசளை செயற்களம் ஆரம்பிப்பதற்கு | குப்பை முகாமைத்துவத்திற்காக பொருத்தமான வேலைத் |

| | | | |
|---|---|---|---|
| | அப்புறப்படுத்துவதற்காக 2023 ஆண்டின் போது ரூபா 517,500 இற்கான செலவொன்று மேற்கொண்டிருந்ததுடன், சபையின் அதிகாரப் பிரதேசத்தில் குப்பைகள் சபையின் ஆதனமொன்றாக இருக்க வேண்டிய போதிலும் குப்பை முகாமைத்துவத்திற்காக நீண்டகால வேலைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | குப்பை வரி அறவீடு செய்வதற்காக பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 159(2) இன் பிரகாரம் துணைச் சட்டங்கள் சட்டவாக்கம் செய்திருக்காமல் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் 83 சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் தங்குமிடங்களில் இருந்து குப்பை வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் சபையினால் அதற்காக அருதியான செய்முறையொன்று தயாரித்திருக்கவில்லை. | குப்பைவரி அறவீடு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என. | குப்பைக் கட்டணம் அறவீடு செய்வதற்குரிய நிச்சயிக்கப்பட்ட செய்முறை ஒன்று தயாரிக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காணிகள் துணைப் பகிர்வுகளுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத்திடம் பூர்வாங்க எழுத்துமூல அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 3 ஏக்கர் 1ரூட் 17 பர்சஸிற்கான கொஸ்கொட ஊருகஹ பாதையில் 37 காணித் துண்டுகளை கொண்ட காணிகளில் இருந்து 04 காணித் துண்டுகளின் அபிவிருத்தி அலுவல்கள் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கம்பனியை மற்றும் காணியின் உரிமையாளரை திட்டக் குழுவிற்கு அழைத்து கலந்துரையாடி காணி துணைப் பகிர்வுகளின் அங்கீகாரத்திற்காக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் நடாத்திச் சென்றிருந்த 09 தொழிற்சாலைகளிலிருந்து ரூபா 44,550 தொகையினை சபை இழந்திருந்ததுடன், அது தொடர்பாக | நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என. | அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய கைத்தொழில்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு |

| | | | |
|---|---|---|---|
| | சபை எதுவித நடவடிக்கைகளும் எடுத்திருக்கவில்லை. | | அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டும். |
| (ஆ) | அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட 83 சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் தங்குமிடங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று நடாத்தி சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு மற்றும் அதன் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படக் கூடிய சேதம் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | இது தொடர்பான கணிப்பீட்டின் இரண்டாம் கட்டம் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | கணிப்பீடொன்று மேற்கொண்டு சுற்றாடல் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற வெளிதர வாராந்த சந்தை 2020 ஆண்டில் மூடப்பட்டு காணப்பட்டதுடன் 2023 ஆண்டு இறுதியளவிலும் மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபாரிகளின் வருகை காணப்படாமையால் இந்த சந்தையை நடாத்திச் செல்வதற்கு முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது என. | சந்தையை செயற்படுத்துவதற்கு பொருத்தமான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்பட வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 17(3) இற்கு இணங்க அனைத்து ஆதனங்களையும் சபையினால் நிருவகிக்க வேண்டியிருந்த போதிலும், சபைக்கு சொந்தமான 25 காணிகளுக்கு எல்லை வேலிகள் போடுவதற்கும், 11 காணிகளின் உரிமையை தீர்த்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு பாதுகாப்பு செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்கு சொந்தமான காணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான ரூபா 28,788,300 தொகை பெறுமதியான 14 காணிகள் மற்றும் பெறுமதியை இனங்காண முடியாத 09 காணிகள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | காணிகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணிகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |
| (இ) | பிரதேச சபைக்கு சொந்தமான 1 ஏக்கர் 2 ரூட் 32.753 பர்சஸிக்கான 04 காணிகள் மற்றும் அளவினை குறிப்பிட்டிருக்காத 02 காணிகள் சபையின் பெயரில் உரித்தினை தீர்த்துக் கொள்வதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணியை உரித்தாக்குவதற்கான சாட்டுதல் கட்டளை வேண்டப்பட்டுள்ளது என. | காணிகளின் உரிமையை தீர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சபைக்கு சொந்தமான அளவினை சுட்டிக் காட்டியிருக்காத 04 காணிகள் மற்றும் 08 ஏக்கர் 02 ரூட் 1 பர்சஸ் தொகைக்கான 20 காணிகளிற்கான பெறுமதியை தொழில்சார் பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவர் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்து நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணித் துண்டுகளுக்குரிய நில வரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு புதிய பெறுமதி மதிப்பீட்டை பெற்றுக் கொண்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்படும் என. | பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து ஆவணப்படுத்த வேண்டும். |
| (உ) | தென் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து 2005 ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 1,000,000 பெறுமதியான டிரக்டர் வண்டியொன்று சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிவினை உரித்தாக்குவதற்கு தேவையான அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | உரிமையினை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | **ஹேகல்ல விளையாட்டு திடல் அபிவிருத்தி செய்தல்** | | |
| (அ) | வேலை விடயம் 1 இன் கீழ் விளையாட்டு திடலில் காணப்பட்ட மண்ணை வெட்டுவதற்காக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மனித உழைப்பின் மூலம் மண் வெட்டுவதற்காக அறிமுகப்படுத்தியிருந்த E1-001 கனமீற்றர் ஒன்றிற்காக ரூபா 840 இற்கான ரேட்டை பயன்படுத்தி 850 கனமீற்றர் மண் வெட்டுவதற்காக ரூபா 714,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 300 கியூப் அளவு மண் வெட்டுவதற்காக பிரதிப் பிரதான செயலாளர் பொறியியல் சேவை அலுவலகத்தினால் கனமீற்றர் ஒன்றிற்கு இயந்திரத்தை பயன்படுத்தி வெட்டுவதற்காக 100 மீற்றர் தூரம் எடுத்துச் செல்வதற்காக அறிமுகப்படுத்தி இருந்த EW-10 கனமீற்றர் ஒன்றிற்கு ரூபா 126 இற்கான ரேட் பயன்படுத்தப்படாமையால் 850 கனமீற்றர்களுக்காக ரூபா 606,900 தொகை (850x714) மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | மண் படையை இயந்திரத்தின் மூலம் அகற்றுவதற்கு காணப்பட்ட பௌதீக நிலைமை மீது மேற்கொள்ள முடியாமல் இருந்தது என. | அங்கீகரிக்கப்பட்ட ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வேலை விடயம் 4, 9 மற்றும் 23 இன் கீழ் அத்திவாரம் வெட்டுவதற்காக பிரதிப் பிரதான செயலாளர் பொறியியலாளர் சேவை அலுவலகத்தின் EW-02 ரேட்டின் கீழ் மனித உழைப்பின் கீழ் மண் வெட்டுவதற்காக அறிமுகப்படுத்தியிருந்த ரேட்டின் கீழ் 41.525 கனமீற்றருக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், இதற்காக EW-10 d இயந்திரத்தின் மூலம் அத்திவாரம் வெட்டுவதற்காக அறிமுகப்படுத்தியிருந்த ரூபா 483 இற்கான ரேட்டை பயன்படுத்தாமையால் ரூபா 34,325 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | மனித உழைப்பின் மூலம் மண்வெட்டுதல் மேற்கொள்ளப்பட்டது என. | -மேற்படி- |
| (இ) | வேலை விடயம் 25 மற்றும் 26 இன் கீழ் பக்கச்சுவர் நிர்மாணிக்கும் போதுக கொங்கிரீட்களுக்காக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ரேட்கள் பயன்படுத்தப்படாமல், பிரதிப் பிரதான செயலாளர் பொறியியல் சேவை அலுவலகத்தினால் அறிமுகப்படுத்தி இருந்த ரேட்கள் பயன்படுத்தப்பட்டமையால் ரூபா 39,731 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | இது வீதி அபிவிருத்தி அல்ல பக்கச்சுவர் நிர்மாணித்தல் ஆகும் என. | -மேற்படி- |

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேவையை விட்டுச் சென்றிருந்த மற்றும் இறந்திருந்த 03 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 61,035 இற்கான கடன் மீதிக்காக உத்தியோகத்தருக்கு அறிவித்திருந்த போதிலும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் xxiv பிரிவு 12.10 இணங்க முகாமைத்துவ அலுவல்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | கடன் மீதியை தீர்ப்பதற்காக தேவையான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்மீதிகள் அறவிடப்பட வேண்டும். |